5 மே 2024
ஈஸ்டர் காலத்தின் 6 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

# newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)



மாதாந்திர கருப்பொருள்
திருஅவையாக குடும்ப வாழ்வை வலுப்படுத்துதல்

# என் அன்பில் நிலைத்திருங்கள்

நீங்கள் அக்கறை செலுத்தும் ஒரு நபர் உங்களை அன்பு செய்கிறார் என்று கூறுவதை, கற்பனை செய்து பார்ருங்கள். அந்த விலைமதிக்கமுடியாத அந்தத் தருணத்தில் உங்கள் எண்ணத்தில் ஓடும் மகிழ்ச்சியையும் உணர்வுகளையும் கற்பனை செய்துபாருங்கள். இன்றைய நற்செய்தியை வாசித்துப் பார்ப்போம். இயேசுவின் உயிர்த்தெழுதல் வரை, அவரோடுப் பயணித்த அவரின் சீடர்கள் அனைவருக்கும் முன்பாக நீங்களும் அவர்களோடு நிறகிறீர்கள்.

அப்போது அவர் உங்களை அன்பு செய்கிறேன் என்று கூறுவதை நீங்கள் கேட்கின்றீர்கள். அவர் அன்பில் நீங்கள் நிலைத்திருக்கவேண்டும் என்றும் அவரின் மகிழ்ச்சியை நீங்களும் பகிர்ந்துகொள்ளவேண்டுமென்றும் அவர் விரும்புகிறார். இதுவே அனைத்திலும் மிகப்பெரிய காதல் கதை.

இன்றைய முதல் வாசகத்தில், யூதர்கள் மேலும் யூதர்கள் அல்லோதோர் மீதும் தூய ஆவியாரின் அருள் பொழியப்பட்டதற்கு பேதுரு சாட்சியாக இருக்கிறார். இதுவரை தூய ஆவியாரை அறியாதிருந்தோர் அவரின் அன்பையும் வல்லமையையும் கண்டு வியப்புற்றனர். அடுத்து, யோவான் தம்முடைய கடிதத்தில் கடவுள் நம்மை அன்பு செய்வதால், நாமும் ஒருவரையொருவர் அன்பு செய்யவேண்டும் என்று வலியுறுத்துகிறார். நம் பாவங்களுக்காக இறந்து நாம் மீட்படைவதற்காகவே கடவுள் இந்த உலகிற்கு தம் மகனை அனுப்பினார். நம் மீட்புக்காக, கடவுள் நம்மீது கொண்ட அன்புக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? இருந்தபோதும் நாம் சிலசமயங்களில் சந்தேகம் கொள்கிறோம்.

இந்த விளக்கம் நமக்குப் போதுமானதாக இல்லையென்று நாம் நினைத்தால், இயேசு நம்மில் பேச அனுமதியுங்கள். இன்றைய நற்செய்தியில் அவரின் அன்பில் நிலைத்திருக்கவேண்டும் என்று இயேசு கூறுகிறார். நம்முடைய மகிழ்ச்சி, நிறைவானதாக இருக்கவேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். அவர் நம்மை அன்பு செய்கிறார் என்றும் அவர் நம்மை அன்பு செய்ததுபோல ஒருவரையொருவர் அன்புசெய்யவேண்டுமென்றும் கட்டளையிடுகின்றார். எத்தனை முறை இவ்வாறு சொல்லவேண்டுமென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? இயேசுவின் அன்பு செயலில் காட்டிய அன்பு. நமக்காக அவருடைய உயிரைக் கையளித்தார் என்பதை அவர் நினைவூட்டிக்கொன்டே இருக்கிறார். அவரைப் போல நம்மால் அவரை அன்புசெய்ய முடியாது. ஆனால் நம்முடைய மறுமொழியை அவர் எதிர்பார்க்கின்றார். செயலற்ற அன்பை அவர் விரும்புவதில்லை. உதட்டால் செய்யும் வழிபாடு அவருக்குத் தேவையில்லை. வெளியே சென்று சான்று பகரவும், நீடித்து நிலைத்திருக்கும் கனிகொடுக்கவும் வேண்டுமென்று அவர் விரும்புகிறார். மேலும் அவர் சொல்வதை நாம் செய்தால், தந்தையாகிய கடவுள் நாம் கேட்பதையெல்லாம் தருவார்.

கடவுளின் ஆவியானவரின் அன்பு திருஅவையின் மீது பொழியப்படுவதை மகிழ்ச்சியோடு நோக்கும் நாம் அவரின் அன்பை உலகனைத்துக்கும் சென்று சான்று பகருவோம்.

அன்பான கடவுளின் சாயலில் மனித குலத்தை உருவாக்கியதன் மூலம் குடும்பம் தொடங்குகிறது. மேலும் ஆணும் பெண்ணும் தனது சாயலைப் போல அன்பு செய்ய கடவுள் அழைக்கின்றார்.

– திருத்தந்தை பிரான்சிஸ்




**இன்றைய இறைவார்த்தை:**

திப: 10: 25-26, 34-35, 44-48

திபா: 98: 1-4

1 யோ: 4: 7-10

யோ: 15: 9-17

INTERNAL CIRCULATION ONLY
BUL 18/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org